தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 22, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991, செப்டம்பர் 7, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், முற்பகல் 9-30 மணிக்கு பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வேட்பதாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.''

பிறர் விரும்பும்படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லும்போது அச்சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண். 3, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

3—

பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம்.

*121—திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் நகரில் ஓர் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனையிலுள்ளது.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் குறிப்பிடுகிறபோது

'ஆம்' என்று குறிப்பிட்டார்கள். அது இப்போது ஆய்வுக்கு எடுக்கப்பட்டுவிட்டதா? எப்போது முதல் இந்த நீதிமன்றம் திறக்கப்படவிருக்கிறது என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க, உயர் நீதிமன்றம் (High Court) இந்த ஆண்டு ஜூலை மாதம் பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவாகும். அதனை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 4, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

4—

குவாரி பணியாட்கள் குடும்பத்திற்கு உதவி.

*603—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிப் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிகளில் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்துக்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப்படுவது இல்லை. ஆனால், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை, காயவிபத்து ஏற்பட்ட இரு தொழிலாளர்களுக்கு ரூ. 16,546.76-ம், மரண விபத்து அடைந்த ஆறு தொழிலாளர்கள் சார்ந்தோர்க்கு ரூ. 2,22,966.76-ம் இழப்பீட்டுத் தொகையாக தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.